பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 [illegible]: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 5 (20—7—68) சனி ★ வெளியூர்: ஆடி 6 (21—7—68) ஞாயிறு [இதழ்: 31

இலட்சம் வாக்காளர்களைக் காணவில்லை!

வரும் நவம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் மேற்கு வங்க இடைத்தேர்தலில், கல்கத்தாவில் ஓட்டளிப்பவர்களில் ஓர் இலட்சம் பேர் வாக்குரிமை இழந்தவர்களாகியுள்ளனராம்.

வாக்காளர் பட்டியலைப் புதுப்

(4-ம் பக்கம் பார்க்க)

தாஷ்கண்ட் உணர்வைக் காப்போம்

ஒப்பந்தம் குலையா வகையில் சோவியத்தை கண்டிப்போம்

பாகிஸ்தானுக்கு இரஷ்ய ஆயுத உதவி பற்றி அண்ணு

தி. மு. கழக நிலை குறித்து தலைமையமைச்சர் இந்திராவிடம் விளக்கம்

புதுடில்லி, சூலை 20—

"பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுத உதவி செய்வதைக் கண்டிக்கும் போது மிதமான போக்கு கடைபிடிக்கப்படும்; அதேநேரத்தில், இப்படிப்பட்ட உதவியில் ஆழ்ந்த கவலையும் அச்சமும் தி.மு. கழகம் கொள்ளும்" என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

"பாகிஸ்தானுக்கு ஆயுதம் தருவது, தாஷ்கண்ட் ஒப்பந்த உணர்வுக்கு விரோதமானது; இப்படி ஆயுதங்கள் தருவதைவிட, தாஷ்கண்ட் உணர்வை வலிவுறச் செய்ய இரஷ்யா நடவடிக்கை எடுக்குமென நம்புகிறேன்" என்றும் அண்ணு அவர்கள் தெரிவித்தார்கள்.

"ஆனல், இதை வற்புறுத்துவதற்காக, தி. மு. கழகம் வெகுவாக மதிக்கும் இந்தியா -- சோவியத் உறவுகளைப் பாதிக்கும் வகையில் எந்தவிதக் கடுமையான கண்டனத்தையும் செய்யாது" என்றும் அண்ணு அவர்கள் தெரிவித்தார்கள்.

நேற்று அண்ணு அவர்கள், தலைமையமைச்சர் இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது அவர், பாகிஸ்தானுக்கு இரஷ்யாவின் ஆயுத உதவி பற்றி அண்ணுவின் கருத்தைக் கேட்டபோது, அண்ணு அவர்கள் மேற்கண்டவாறு கழகக் கொள்கையை விளக்கியதாகத் தெரிகிறது.

ரூ. 9 இலட்சம் செலவில் இலவசப் பாட நூல்கள்

எட்டாம் வகுப்பு வரையில் எல்லா மாணவ -- மாணவியர்களுக்கும் கிடைக்கும்

இவ்வாண்டு சென்னை மாநகராட்சியின் ஏற்பாடு

சென்னை, சூலை 20—

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 8-வது வகுப்பு வரையில் உள்ள மாணவ – மாணவியர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள்—நோட்டுப் புத்தகங்கள்—சிலேட்டுகள் வழங்கப்படும்.

சென்ற ஆண்டு வரையில், ஐந்தாவது வகுப்பு வரையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த இந்தத் திட்டம், இவ்வாண்டில் மேலும் மூன்று வகுப்புகளுக்கு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த 2 இலட்சம் மாணவ – மாணவியர்களுக்கு இத்திட்டத்தின்படி இன்னும் பத்து நாட்களில் இலவசப் புத்தகங்கள்—நோட்டுகள்—சிலேட்டுகள் கிடைக்கும்.

இத்திட்டத்தினுல், மாநகராட்சிக்கு ரூ. 9 இலட்சம் செலவாகும்.

சென்ற ஆண்டில், ஆகஸ்டுத் திங்களில் இவை வழங்கப்பட்டன; இவ்வாண்டில், அதற்கு ஒரு கிழமைக்கு முன்னரே வழங்கப்படும்.

ரூ. 17.25 கோடிக்கு ஒப்பந்தம்

புதுடில்லி, சூலை 20—

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்காக அமெரிக்கா, 2.3 கோடி டாலர் (ரூ. 17.25 கோடி) கடன் தரும் ஒப்பந்தம் ஒன்று உருவாகியிருக்கிறது.

மத்திய அமைச்சர்களுடன் முதலமைச்சர் அண்ணு

மாநிலப் பிரச்சினைகள் குறித்து பேச்சு

நிதிக் குழுவின் கடமை குறித்தும் வலியுறுத்தல்

புதுடில்லி, சூலை 19—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், நிதிக் குழுவைச் சந்தித்து விவாதம் நடத்தியிருப்பதுடன், உள்துறை அமைச்சர் சவான், வணிகத் துறை அமைச்சர் தினேஷ் சிங், சிவில் போக்குவரத்து அமைச்சர் கரண் சிங் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

தமிழக ஆலை நெருக்கடியைத் தீர்க்க மத்திய அரசு வழங்க ஒத்துக்கொண்ட ரூ. 5 கோடியை விரைவாக வழங்க எடுத்துக் கொள்ளவேண்டிய வழிமுறைகள் குறித்து அண்ணு அவர்கள் தினேஷ் சிங்கிடம் விவாதித்தார்; அடுத்த செப்டம்பர் திங்களில் சென்னைக்கு வருகை தந்து ஆலைச் சொந்தக்காரர்களையும், தொழில் அதிபர்களையும் சந்தித்துப் பேசுமாறும் தினேஷ் சிங்கிடம் அண்ணு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இதுவரையிலான நிதிக் குழுக்களின் பரிந்துரைகளில், மாநில அரசின் வருமான வாய்ப்புக்களுக்கும், அவைகள் நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்களுககும் இணக்கமான தொடர்பு இருந்ததில்லை என்று அண்ணு அவர்கள், நிதிக் குழுவிடம் கூறிவிட்டதாகத் தெரியவருகிறது. தற்பொழுதைய நிதிக் குழு, இதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்றும், அரசியல் சட்டம் மாநிலங்கள்மீது சுமத்தியுள்ள பொறுப்புக்களை ஈடேற்ற மாநிலங்களுக்கு அதிக வாய்ப்புக்கள் இருப்பதை உணர வேண்டுமென்றும் அண்ணு அவர்கள் வற்புறுதியிருக்கிறார்கள்.

மாநில அரசுகளின் வரவு--செலவுத் திட்டத்தை, அவைகளின் வளர்ந்துவரும் கடன் பொறுப்புக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கின்றன என்பதையும், இந்தக் கடன் சுமை குறையாது இருக்கும் நிலைமையை முதலாவதாகச் சமாளிக்க வேண்டுமென்றும், அப்பொழுதுதான் மாநில அரசுகள் பாங்கியிலிருந்து சக்திக்கு மீறின அளவில் அதிகப் பற்று வாங்காமல் தடுக்க முடியுமென்றும் வற்புறுத்திய தாகத் தெரியவருகிறது.

தற்போதைய நிதிக் குழு, மாநிலங்களின் இந்த நிலைமையை எளிதாக்குவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து யோசனை தெரிவிக்கும் என்ற நம்பிக்கையையும் அண்ணு அவர்கள் தெரிவித்தார்கள்.

எதிர்க் கட்சி தலைவர்களுடன் இந்திரா ஆலோசனை

'பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி அளிப்பது' என்ற இரஷ்யாவின் முடிவு பற்றித் தலைமையமைச்சர் இந்திரா, நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர்களுடன் இரண்டு மணி நேரம் விவாதித்தார்.

தி. மு க. சார்பில் இரா. செழியன், வெ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இவ்விவாதத்தில் கலந்து கொண்டனர்.

இரஷ்யாவின் முடிவு பற்றி இந்திய அரசு கொண்டுள்ள கவலையையும் வருத்தத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

மக்களின் கருத்தைப் போதிய அளவில் வெளிப்படுத்துவதற்கு, நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டுமென அவர்கள் குறிப்பிட்டனர்.

"பாகிஸ்தான் நடத்தைப் பற்றி இரஷ்ய அரசு தரும் உறுதிமொழிகளை நம்புவதற்கில்லை என்றாலும், இரஷ்யாவுடன் இந்தியாவுக்குள்ள நட்புறவுகளைப் பாதிக்கக்கூடிய எதனையும் செய்யலாகாது" என்று பெரும்பாலான எதிர்க் கட்சிகள் கருத்தறிவித்தன.

சிறந்த தமிழ்ப் படங்களுக்குப் பரிசு

தமிழக அரசின் ஏற்பாடு

மீ. ப. சோமசுந்தரம் தலைமையில் தேர்வுக் குழு

சென்னை. சூலை 20—

நல்ல தரமும், அறிவூட்டும் அல்லது கலாச்சாரச் சிறப்பும் உள்ள தமிழ்ப் படங்களின் தயாரிப்பை ஊக்குவிக்கும்வகையில், சிறந்த தமிழ்ப் படத்திற்கு ஆண்டுதோறும் பரிசு வழங்கும் திட்டமொன்றுக்குத் தமிழக அரசு அனுமதியளித்திருக்கிறது.

சென்னை வானெலி நிலையத் தலைமைத் தயாரிப்பாளர் எம். பி. சோமசுந்தரம் தலைமையில் 9-பேர் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று இதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

பரிசுக்காக வரும் படங்களை ஆராய்ந்து—சிறந்த திரைப் படடைரக்டர், கதை ஆசிரியர், நடிகர்கள் -- நடிகைகள் ஆகியோரின் பெயர்களை இக்குழு, அரசுக்குச் சிபாரிசு செய்யும்.

1968—69-ல் பரிசுகளை வழங்குவதற்காக ரூ 1.10 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. சிறந்த தமிழ்ப் படத்துக்கு --- சிறு சேமிப்புப் பத்திரங்களாக --- ரூ. 50,000 வழங்கப்படும்; இரண்டாவது சிறந்த படத்துக்கு -- சிறு சேமிப்புப் பத்திரங்களாக -- ரூ. 25,000 வழங்கப்படும்; மூன்ருவது சிறந்த படத்துக்கு -- சிறு சேமிப்புப் பத்திரங்களாக --- ரூ. 15,000 வழங்கப்படும்.

சிறந்த கதை ஆசிரியர்—சிறந்த டைரக்டர்—சிறந்த நடிகர், நடிகைகள் ஆகியோருக்குத் தலா ரூ. 5,000 -- சிறு சேமிப்புப் பத்திரங்களாக --- வழங்கப்படு.

குழுவின் தலைவராக மீ. ப. சோமசுந்தரம் (சோமு) நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னைப் போலீசுக் கமிஷனர் குப்புசாமி செயலாளராகப் பணியாற்றுவார்.

சென்னை ஆர்ச் பிஷப் அருளப்பா, ஏ. கே. ஏ. அப்துல சமது எம்.பி., டாக்டர் விசாலாட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

நிபுணர்களின் முயற்சி சீர்குலைகிறது

காவிரி எண்ணெய் வள ஆய்வுத் திட்டம் கட்டுப்படுத்தப்படுகிறது

இயந்திரச் சாதனம் அகற்றப்படுவதன் நோக்கம்?

வளமிருப்பது தெரிந்தும் 'வஞ்சனை'க்கு வித்திடுகின்றனரா?

சென்னை, ஜூலை 20—

காவிரி ஆற்றுப் படுகையில் எண்ணெய் தோண்டி எடுக்கும் முயற்சிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆழமான எண்ணெய்க் கிணறுகள் தோண்டக்கூடிய இரு இயந்திரங்களில் ஒன்றை எண்ணெய் தோண்டும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் பகுதியிலிருந்து அகற்றுமாறு எண்ணெய்—இயற்கை வாயுக் குழு யோசனை கூறியிருக்கிறது.

எண்ணெய் தோண்டும் இந்த இயந்திரச் சாதனம் கொண்டு வரப்பட்டு ஓர் ஆண்டுதான் ஆகிறது. இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள நிபுணர்கள் இதன் விளைவாகச் சோர்வு அடைந்துள்ளனர்; 'எண்ணெய் தோண்டி எடுக்கும் முயற்சியைத் தளர்த்தும் எந்த நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளக்கூடாது' என்று அவர்கள் பல வாரங்களாக வாதம் செய்து வந்திருக்கின்றனர்.

காவிரி ஆற்றுப் பகுதியில் எண்ணெய் தோண்டி எடுக்கும் திட்டம் தற்காலிகமாகவேனும் திரும்பப்பெறப்படலாம் என்று டில்லியிலிருந்து செய்திகள் கிடைத்துக்கொண்டிருந்தன; மத்திய அரசின் பெட்ரோலியம் துணையமைச்சர் சென்னைக்கு வந்திருந்தபோது இந்தச் செய்தியை மறுத்தார்; ஆனால் சென்னையிலிருந்து திரும்பிய பிறகுதான், ஒரு இயந்திரச் சாதனத்தை அகற்றுவதற்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது.

"காவிரி ஆற்று ஓரத்தில் எண்ணெய் தோண்டி எடுக்கும் நடவடிக்கைகளை இந்தக் கட்டத்தில் திரும்பப்பெறுவது அவசரப்படுவதாகும்" என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

உலகம் முழுவதிலும் பல நாடுகளில் எண்ணெய் தோண்டி எடுக்கப்படுகிறது; அந்த அனுபவத்திலிருந்து 10 எண்ணெய்க் கிணறுகளில் ஒன்றுதான் பயனுள்ளதாக இருக்கும் என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன; ஆனால் காவிரி ஆற்றுப் படுகையில் 6 கிணறுகளே தோண்டப்பட்டுள்ளன; அவற்றில் 2 சரிவரத் தோண்டப்படவில்லை. போதுமான சாதனங்கள் இல்லாமையே இதற்குக் காரணம்.

"1970 வரையில் காவிரிப் படுகையில் எண்ணெய் தோண்டி எடுக்கும் வேலை நடைபெற வேண்டும்" என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த வேலையைக் கட்டுப்படுத்த நேர்ந்தால் 'அரசியல் நோக்கம் காரணமாகவோ அல்லது நிதி வசதியின்மை காரணமாகவோ அவ்வாறு செய்திருக்கக் கூடும்' என்று நிலைமை அறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஏனோ அறிவிக்கவில்லை குழு

பொதுவாக, எண்ணெய் தோண்டி எடுக்க வேண்டிய புதிய இடங்களை, குழு, தொடர்ச்சியாகத் தெரிவித்துக்கொண்டிருப்பது வழக்கம். அப்படியானால்தான் இயந்திரச் சாதனங்களைத் தாமதமின்றிச் சிறந்த இடங்களில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சென்ற 8 கிழமைகளாக காவிரி ஆற்றுப் படுகையில் எண்ணெய் தோண்டி எடுப்பதற்கான புதிய இடங்கள் அறிவிக்கப்படவில்லை. ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள இரு இடங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதிகமாகப் போனால், அங்கு இரு இயந்திரச் சாதனங்களுக்கு 3 திங்களுக்கு வேலை இருக்கும். எண்ணெய் தோண்டுவதற்குப் புதிய இடங்களை அறிவிக்காவிடில், ஓர் இயந்திரச் சாதனத்தை அப்புறப்படுத்த வேண்டியிருக்கும்.

உத்தரவுகள் ஏன் பிறப்பிக்கப்படவில்லை?

பாம்பன் தீவில் எண்ணெய் தோண்டும் வேலை ஆரம்பமாகும் என்று துணை பெட்ரோலியம் அமைச்சர் சூசகமாக அறிவித்தார்; ஆனால், எண்ணெய்—வாயுக் குழு, பாம்பன் பற்றி இதுவரையில் உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை. ஏனெனில், பாம்பனில் வசதிகள் ஒன்றும் கிடையாது. ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கூட இனி கட்டித்தான் ஆகவேண்டும்; பாம்பனை, 'எண்ணெய் தோண்டுவதற்கான இடம்' என்று அறிவித்ததாலன்றி, 1969 மத்தி வரையில எண்ணெய் தோண்டும் வேலையை ஆரம்பிப்பதற்கில்லை.

'அரசியல் முடிவின்' அடிப்படையிலா?

காவிரி ஆற்றுப்படுகையில் எண்ணெய் தோண்டும் இயந்திரச் சாதனங்களில் ஒன்றை ஆந்திராவுக்குக் கொண்டுபோகக் கூடிய நிலைமை பற்றி நிபுணர்கள் தமக்கிடையே விவாதித்து வருகின்றனர்.

ஆந்திராவுக்கு ஓர் இயந்திரச் சாதனத்தை எடுத்துச் செல்ல நேர்ந்தால், அது 'அரசியல் முடிவின்' அடிப்படையில் இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

கோதாவரி—கிருஷ்ணா ஆற்றுப் படுகையில் எண்ணெய் வெட்டி எடுப்பதற்கான ஆய்வு பல இடங்களில் நிறைவு பெற்றுள்ளது. நரசாப்பூர் பகுதியிலும், கோதாவரி – கிருஷ்ணா ஆற்றுப் படுகையிலும் எண்ணெய் தோண்டி எடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று சில நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்; அந்தப் பகுதிகள், காவிரி ஆற்றைப் போலவே எண்ணெய் வளம் உள்ளது என்று அவர்கள் கருதுகின்றனர்.

நிபுணர்களின் கருத்து மதிக்கப்படுமா?

காவிரியாற்றுப் படுகையின் முதல் ஊற்றில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாலும், மற்றக் கிணறுகளில் எண்ணெய் இருப்பதற்கு அறிகுறியாக வாயு தென்பட்டிருப்பதாலும், இந்தப் பகுதியிலும், சிதம்பரம், பாம்பன் பகுதிகளிலும் எண்ணெய் தோண்டும் வேலை தீவிரமாக நடத்தப்பட வேண்டுமென்றும், பிறகுதான் ஆந்திராவில் கவனம் செலுத்த வேண்டுமென்றும் மற்றும் சில நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

காரைக்காலில் நடைபெறும் ஆய்வும் கைவிடப்படுமா?

காரைக்கால் அருகே உள்ள மருங்கூரில் இப்போது ஒரு எண்ணெய்க் கிணறு தோண்டப்படுகிறது. இதில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டால்தான், காரைக்கால் பகுதியில் எண்ணெய் எடுக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறும்; இல்லாவிட்டால் இந்த முயற்சி கைவிடப்படும்.

இந்த எண்ணெய்க் கிணறு திட்டச்சேரிக்கு அருகே உள்ளது. 1800 மீட்டர் ஆழத்தில் இந்த ஊற்றிலிருந்து மூன்று பீப்பாய்கள் நிறைய முதன் முதலாக எண்ணெய் எடுக்கப்பட்டது.

அறிகுறிகள் தென்பட்டும் அலட்சியப்படுத்தினர்?

நாகப்பட்டணம் அருகில் திட்டச்சேரி (4000 மீட்டர்); திருத்துறைப்பூண்டி (2500 மீட்டர்); ஆடுதுறை (2550 மீட்டர்)—இம்மூன்று இடங்களிலும் சோதனைகள் நடத்திய பிறகு, இரு இடங்களைக் கைவிட வேண்டியதாயிற்று.

கைவிடப்பட்ட ஒரு இடத்தில் எண்ணெய் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன; ஆனால் தகுந்த இயந்திரச் சாதனங்கள் பயன்படுத்தப்படவில்லை.

போதுமான எண்ணெய் கிடைக்கவில்லையாம்

பட்டுக்கோட்டை அருகில் அலாடிகுமிழி; முத்துப்பேட்டை, திருப்பூண்டி அருகில் வேட்டைக்காரன் இருப்பு; கந்தர்வகோட்டை, தஞ்சை, கும்பகோணம், மன்னார்குடி முதலிய இடங்களில் 7 எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டன; அடுத்தக் கிணறு, வேட்டைக்காரன் இருப்பு அருகில் தோண்டப்படும்.

மன்னார்குடியில் தோண்டப்பட்ட கிணற்றில் வாயு தென்பட்டது; ஆனால் சோதனைகளில் போதுமான எண்ணெய் கிடைக்கவில்லை.

வளமிருந்தும் பயனென்ன?

எண்ணெய்ப்படுகை காரைக்கால் கடற்கரைக்கு மேற்கே எங்கேனும் இருக்கிறதா அல்லது கடலுக்குள் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்கத் திட்ட நிபுணர்கள் முயற்சி செய்து வந்திருக்கின்றனர்.

காவிரி நதிப் படுகையில் மூன்று விதமான எண்ணெய்ப் படுகைகள் இருப்பதாக அவர்கள் நம்புகின்றனர்; ஒன்று காரைக்காலுக்கு அருகில் இருக்கலாம்; இந்தப் பகுதியில் தீவிர சோதனை நடைபெற்றிருக்கிறது.

இரண்டாவது படுகை பாம்பனிலும், மூன்றாவது படுகை கொள்ளிடம் முகத்துவாரம் அருகிலும் உள்ளன.

பாம்பனில் எண்ணெய் தோண்டும் இடம் இன்னும் அறிவிக்கப்படவில்லை; ஆனால் கொள்ளிடம் அருகில் மாதானம் என்னும் இடத்தில் எண்ணெய் தோண்டலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மருங்கூரில் எண்ணெய் தோண்டி எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் எண்ணெய் கிடைப்பது பற்றி மிகவும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக மாதானத்தில் தோண்டப்படும் எண்ணெய் கிணறு நம்பிக்கை தருகிறது; அங்கு வாயு தென்பட்டுள்ளது; எனினும், மேல்மட்டத்தில் எண்ணெய் தென்படவில்லை.

திட்டச்சேரியில் ஏன் தோண்டப்படவில்லை?

காவிரி நதிப் படுகையில் எண்ணெய் ஆங்காங்கு இருக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். தீவிரமாகத் தோண்டுவது சுலபமல்லவென்று அவர்கள் கின்றனர்.

திட்டச்சேரியைச் சுற்றிலும் மேலும் பல எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்க வேண்டும் என்று சில நிபுணர்கள் கருதுகின்றனர்; ஆனால் எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதற்கு அந்தப் பகுதியின் அமைப்பு வசதியாக இல்லை என்று மற்றும் சில நிபுணர்கள் கருதுகின்றனர். இதுவரையில் தோண்டிப் பார்த்ததில் நாகப்பட்டினத்தைச் சுற்றிலுமோ அல்லது திட்டச்சேரியைச் சுற்றிலுமோ எண்ணெய் தென்படலாம் எனத் தெரிகிறது.

எந்தவித முடிவுக்கும் வர இயலாத நிலை ஏன்?

"பாம்பனிலும், கொள்ளிடத்திலும் ஆழமாகத் தோண்டிப் பார்க்காமல் கடல் பகுதியில் எண்ணெய் இருப்பதாகக் கூற முடியாது" என்று நமது நிபுணர்கள் கூறுகின்றனர்.

ரூ. 65-இலட்சம் செலவில் இந்தியா—இரஷ்யா கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டப்படி, காரைக்காலை அடுத்துள்ள கடற் பகுதியில், 'எண்ணெய்த் திட்டுகள் இருக்கின்றனவா' என்று முன்னோட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டது. 'எண்ணெய்த் திட்டுகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன' என்று இரஷ்ய நிபுணர்கள் சரியான புள்ளி விவரங்கள் தராததால், இந்திய நிபுணர்கள் எந்தவிதமான முடிவுக்கும் வர இயலாத நிலையில் இருக்கின்றனர்.

ஓர் இரஷ்யக் கப்பலும், 'எண்ணெய்த் திட்டுகள் இருக்கின்றனவா' என்று சோதனை நடத்தியது; ஆனால், 'அந்தக் கப்பல், தற்கால சாதனங்களைப் பயன்படுத்தவில்லை' என்று இந்திய நிபுணர்கள் கருதுகின்றனர்.

மதுவிலக்குத் திட்டம்

இராஜஸ்தான் முடிவு

ஜெய்ப்பூர், ஜூலை 20—

1972—73-க்குள் மாநிலம் முழுவதிலும் முழு மதுவிலக்கை அமுல் நடத்துவது என்று இராஜஸ்தான் அரசு இறுதி முடிவு செய்துவிட்டது.

1973-74-லிருந்து முழு மதுவிலக்குத் திட்டத்தை அமுலாக்குவதற்கு அரசு முதலில் முடிவு செய்திருந்தனர்.

ரூ. 234 கோடி செலவில் எண்ணெய்த் தொழிற்சாலை

குசராத்தில் அமையுமாம்

தெஹ்ரான், ஜூலை 19—

ரூ. 234.75 கோடி செலவில் புதிய எண்ணெய்த் தொழிற்சாலை ஒன்று குசராத் மாநிலத்தில் அமைக்கப்படும்.

மத்திய அரசு—ஈரான் நாடு—டாட்டா நிறுவனம்—ஓர் அமெரிக்க நிறுவனம் ஆகியவை கூட்டாகச் சேர்ந்து இத்தொழிற்சாலையை நடத்தக்கூடுமாம்.

தஞ்சை மாவட்டத்தில் தென்னை வளர்ச்சி திட்டம்

ரூ. 31.5 லட்சம் செலவில் அமுலாக்க தமிழக அரசு அனுமதி

2,000 ஏக்கரில் செயல்படுத்தப்படும்

உதவித் தொகை தாராளமாக வழங்கப்படும்

சென்னை, ஜூலை 20—

தஞ்சை மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் தென்னை வளர்ச்சித் திட்டமொன்றை அமுலாக்கத் தமிழக அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

விவசாய நிதிக் குழுவின் உதவியால் துவக்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் மதிப்பு ரூ. 31.5 இலட்சமாகும்; தமிழகத்தில் இப்படிப்பட்ட திட்டமொன்று துவக்குவது இதுதான் முதலாவதாகும்.

பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, திருத்துறைப்பூண்டி தாலுகாக்களில் 2,000 ஏக்கரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சீரான இடமாகவும், எளிதாக மேற்பார்வையிடவும், தொடர் நடவடிக்கைகட்கு ஏற்றதாகவும் இந்த இடங்கள் அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சம், உதவித் தொகை தாராளமாகக் கிடைக்கும் என்பதாகும். உள்நாட்டுப் பகுதிகளாக இருந்தால் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,700 உதவி கிடைக்கும். கடலோர மணற்பகுதியான இடமாக இருந்தால இந்த உதவி ரூ. 1,200-ஆக இருக்கும். (மாநில தென்னை வளர்ச்சித் திட்டத்தின்படி இப்பொழுது தரப்படுவது ரூ. 300 ஆகும்.) இத்தொகைகள் மாநில நில அடமான பாங்கிகள் மூலம் வழங்கப்படும்.

கடன் கோரிக்கை மனுக்களைப் பரிசீலிக்கவும், விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை வழங்கவும், உற்பத்தியாளருக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகளைக் கூறவும், தென்னை உற்பத்தியில் பயிற்சி பெற்ற தனி ஊழியர்கள் நியமிக்கப்படுவர்.

இத்திட்டத்தின் மூலம், இந்த 2,000 ஏக்கரிலிருந்து மேற்கொண்டு 1,000 டன் கொப்பரை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயிகளின் குறை--தேவைகளைக் கேட்டறிய விவாத அரங்குகள்

மாவட்டங்கள்தோறும் நடத்தத் திட்டம்

தமிழக அரசின் நோக்கம்--அமைச்சர் ஏ. கோவிந்தசாமி விளக்கம்

சென்னை, ஜூலை 20—

“விவசாயிகளின் பிரச்சினைகளில் தனிக் கவனம் செலுத்திவரும் தமிழக அரசு, அவர்களின் குறைகளையும் தேவைகளையும் அறிந்து ஆராய மாவட்டந்தோறும் விவாத அரங்குகளை இந்த ஆண்டும் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது” என்று, விவசாயத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தெரிவித்தார்.

“இப்படிப்பட்ட விவாத அரங்குகளின் முதல் கூட்டம் ஆகஸ்டு முதல் நாளன்று தஞ்சாவூரில் நடைபெறும்; முதலமைச்சர் அண்ணா அவர்களும் ஏனைய அமைச்சர்களும் இதில் பங்கேற்பர்” என்றும் அவர் தெரிவித்தார்.

“சென்ற ஆண்டு நடத்தப்பட்ட கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், உயர் ரக விதைகள், உரங்கள், நீர்ப்பாசன வசதிகள் குறித்தும் இந்தக் கூட்டங்களில் ஆராயப்படும்” என்றும் அவர் தெரிவித்தார்.

உதவி கோரினோம் --- பதிலாவது கிடைத்ததா ?

செய்தியாளர்களிடம் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் மேலும் தெரிவித்ததாவது :—

“தமிழ்நாட்டில் விவசாய வளர்ச்சிக்கென சில முக்கியமான திட்டங்களை அரசு அனுமதித்திருக்கிறது.

‘பருவ மழை தவறிய காலங்களிலும், விவசாயத்துக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கவேண்டும்; அதன்மூலம், அதிக உணவு உற்பத்தி செய்யவேண்டும்’ என்ற எண்ணத்தில், குழாய்க் கிணறுகள் அதிகமாக வெட்டுவதற்காக 1967—68-ம் ஆண்டில் ரூ 20-கோடியைத் தனி மானியமாகத் தரும்படி மத்திய அரசைக் கேட்டோம; திட்டக் கணக்கில் சேர்க்காமல் தனிக் கணக்கில் தருமாறு கோரினோம்; ஆனால், அதற்கு இதுவரையில் பதில் ஒன்றும் வரவில்லை. ஒரு சிறு தொகை கூட டெல்லி அரசு தரவில்லை சென்ற ஆண்டில் தஞ்சைக்கு வந்திருந்த டெல்லி உணவு அமைச்சரும் இதற்காகச் சிறு தொகையாவது தரும்படி ஏற்பாடு செய்வதாகக் கூறினர்; எதுவும் வரவில்லை.

ரூ. 12 கோடி செலவிடத் தமிழக அரசு முடிவு

எனவே, ரிசர்வ் பாங்கி—இன்சூரன்சுக் கம்பெனி—கூட்டுறவு நில அடமான பாங்கி இவைகள் மூலம் விவசாயிகள் கடன்பெற இப்போது ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

1—4—68-ந் தேதிமுதல் கிணறுகள் வெட்டவும், பம்பு செட்டுகள் வைக்கவும் கூட்டுறவு நில அடமான பாங்கிகள் கடன் கொடுக்கும்; அந்தப் பாங்கிகள் 8-கோடியே 70-இலட்சம் ரூபாய் திரட்டி வழங்கும்.

மொத்தத்தில் இந்த ஆண்டில், இந்த வகையில் ரூ. 12-கோடி செலவிடத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

விவசாயத் தொழில் நிறுவனம் கடன் வழங்க வசதி

விவசாயத் தொழில் கார்ப்பரேஷன் (அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன்) மூலமும், விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இந்தக் கார்ப்பரேஷனுக்குத் தமிழக அரசு ரூ. 20-இலட்சமும், மத்திய அரசு ரூ. 50-இலட்சமும் கொடுத்திருக்கின்றன.

இந்த ஆண்டு பம்பு செட் வாங்குவதற்காக, ஒரு கோடி ரூபாயும், டிராக்டர்கள் வாங்க ரூ. 20 இலட்சமும் கடனாக இந்தக் கார்ப்பரேஷன் கொடுக்கும்.

டிராக்டர்கள் வாங்கக் கடன்

கடந்த ஆண்டில் 211 டிராக்டர்கள் வாங்கத் தமிழக அரசு கடன் தொகையை அனுமதித்தது; ஆனால் விவசாயிகள் 123 டிராக்டர்கள் மட்டும்தான் வாங்கினார்கள். வாங்காத மீதி டிராக்டர்களோடு, மேலும் சேர்த்து இந்த 1968—69 ம் ஆண்டுக்கு மட்டும் 409 டிராக்டர்கள் வாங்குவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் விவசாயத் தொழில் கார்ப்பரேஷன்மூலம் கொடுக்கப்படும். ஒவ்வொன்றும் 30 ஆயிரம் ரூபாய் விலை ஆகும்.

காலதாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை

விவசாயிகள் கூட்டுறவு நில அடமான பாங்கியில் கடன்வாங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

23-ஆண்டுச்கு வில்லங்க சர்டிபிகேட் வேண்டும் என்பதற்குப் பதிலாக, ‘13-ஆண்டுக்கு மட்டும் கொடுத்தால் போதும்’ என்று அவசரச் சட்டம் போட்டிருக்கிறோம். அத்துடன் கடன் மனு வந்து சேர்ந்த 33-நாட்களுக்குள், அந்த மனுவின் மீதான எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, ‘உண்டா? இல்லையா?’ என்ற பதிலையும் அவர்களுக்குத் தெரிவித்துவிடவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

இப்படித் துரிதப்படுத்தும் வேலைகளை கூட்டுறவுப் பதிவாளர் செயல்படுத்துவார்; இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித் துணைக் கலெக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படித் துரிதப்படுத்தியதன் காரணமாக திருச்சி மாவட்டத்தில் மட்டும் ரூ. 65 இலட்சம் கடன் கொடுக்கப்பட்டுவிட்டது.

தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 1 கோடி கடன் கொடுக்க முயற்சி எடுத்திருப்பதாகக் கலெக்டர் கூறினர்; அதன் முதற்படியாக அண்மையில் முதலமைச்சர் அங்கு சென்றிருந்தபோது, ரூ. 1¼ இலட்சம் கடனாக கொடுத்தார்.

நீண்டகால கடனுக்கு அனுமதி

கூட்டுறவு பாங்கிகள் மூலம் 10 ஆண்டு—15 ஆண்டு நீண்டகாலக் கடன்களை 8½ சதவிகித வட்டியில் கொடுப்பதற்கும் இப்பொழுது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

பாங்கிகள் மூலம் சமூகக் கட்டுப்பாடு அடிப்படையில் ஒவ்வொரு பாங்கியும், விவசாயிகளுக்கு ஐந்தாண்டுக் குறுகிய காலக் கடன் கொடுக்கும் ஏற்பாட்டின்படி, செங்கற்பட்டு மாவட்டத்தில் ‘சின்டிகேட்’ பாங்கியினர், டிராக்டர்கள் வாங்குவதற்காக ரூ. 25 இலட்சம் கடனாகத் தரப் போகின்றனர்; இதற்கான விழா வாலாஜாபாத்தில் 21-ந் தேதி நடைபெறும்.

இந்தப் பாங்கியினர் இப்படிக் கடன் கொடுக்கும் தொகையை ரூ. 50 இலட்சமாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 8 சதவீதம் வட்டி வசூலிப்பார்கள். ஒழுங்காக திருப்பிக் கொடுத்துவிட்டால், ½ சதவீதம் கழிவுத் தொகையும் உண்டு.

கிணறு தோண்ட வசதி

பிற்பட்ட மாவட்டங்களில், சிறிய நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டப்படி செங்கற்பட்டு மாவட்டத்தில் 3 ஆண்டுகளில் 2,000 கிணறுகள் வெட்ட ரூ. 37.5 இலட்சம் கடனாகக் கொடுக்கப்படும்; இதில் உதவித் தொகை 25 சதவீதமோ, அல்லது அதிகபட்சம் ரூ. 500 ஆகவோ இருக்கும்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் 3 ஆண்டுகளில் 2 000 குழாய்க் கிணறுகளும், 1,000 வடிமுனைக் குழாய் கிணறுகளும், தோண்ட விவசாயிகளுக்குக் கடன் மானியம்—நிர்வாகச் செலவு என்று மொத்தமாக 1 கோடியே 24 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிடப்படும்.

கடன்அளவு அதிகரிப்பு

விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட கடன் தொகையைவிட, இந்த ஆண்டு கொடுக்கப்படும் கடன் தொகையின் அளவு அதிகமாக இருக்கும்.

அத்துடன், இரசாயன உரமும் பெரும் அளவில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

முழு ஆய்வு தயார்

தஞ்சை மாவட்டத்தில் எங்கெந்த இடத்தில் எவ்வளவு தண்ணீர் வசதி இருக்கிறது—அங்கு எங்கெந்த வகை நெல் எத்தனை தடவை பயிரிடலாம்—அவைகளுக்கு எவ்வளவு இரசாயன உரம் தேவை என்ற முழு ஆய்வும் தயாரகிவிட்டது.

பூச்சி மருந்து தெளிப்பு!

முதன் முறையாகத் தஞ்சை மாவட்டம் திருவையாறுப் பகுதியில் 400 ஏக்கர் நிலத்தில் நெற்பயிர் பூச்சியை ஒழிக்க விமானத்திலிருந்து மருந்து தெளிக்கப்படும்

தன்னிறைவு--உபரி காண்பதற்கு முயற்சி

கடந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 6 இலடசம் ஏக்கர் நிலத்தில் இருபோக சாகுபடிக்குத் திட்டமிடப்பட்டது. தண்ணீர் குறைவு காரணமாக 2 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மட்டுமதான் இருபோக சாகுபடி நடந்தது. ஆனல் இந்த ஆண்டில் 6 இலட்சம் ஏக்கர் நிலத்தில்—முதலில், ‘ஏ.டி.டி.-27’ நெல்லும், அடுத்தது, ‘சி.ஓ. 25’ போன்ற குறுகியகால நெல்லும் பயிரிடுவது என முடிவு செய்திருக்கிறோம்; இந்த ஏற்பாடுகளினல், தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியில் தன்னிறைவுக்கு மேலாக சிறிது உபரியும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விசைப் படகுகள் வழங்கும் திட்டம்

இதுவரையில், தமிழ்நாட்டில் 558 விசைப் படகுகள் வழங்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு 159 விசைப் படகுகள் வழங்கப்பட இருக்கின்றன; இவைகளைப் புதிய ஏற்பாட்டின்படி பயிற்சி பெற்ற மீன்பிடி குழுவினருக்கு 50-சதவிகிதப் படகுகளும், மற்றவர்களுக்கு 80-சதவிகிதப் படகுகள் வீதமும் வழங்கப்படும்.

இந்த 159 படகுகளுக்கான இயந்திரங்கள் சில வெளிநாட்டில் செய்யப்பட்டவை; இவைகளை மொத்தமாகக் கணக்கிட்டு -- ‘திருவுளச் சீட்டு’ப் போட்டு -- அதன்படி இயந்திரங்கள் பங்கிட்டு கொடுக்கப்படும்.

இந்தத் ‘திருவுளச் சீட்டு’ப் போடுவது பொதுமக்கள் முன்னிலையில் -- மீன் துறை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும்; இதன்மூலம் பாரபட்சம் என்ற புகாருக்கு இடம் இல்லாமல் போய்விடுகிறது.”

தலைமையமைச்சர் மீது நிர்ப்பந்தம் !

புதுடில்லி, ஜூலை 19—

அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடை வழங்குவதைக் கட்டுப்படுத்தும் மசோதாவைத் திரும்பப் பெறவேண்டுமெனக் கோரி, தலைமையமைச்சர் இந்திரா காந்திமீது பலமான நிர்ப்பந்தம் செலுத்தப்படுவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த நிதி நிலைக் கூட்டத் தொடரின் கடைசி நாளுக்குமுன்னுல்தான், மிகுந்த தகராறுக்குரிய இம்மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கலாகியிருக்கிறது என்பது நினைவுகூரத்தக்கது.

உயிருடன் எரிக்கப்பட்ட அரிசனச் சிறுவன்

குடும்பத்திற்கு நிதியுதவி

‘நிலம் வாங்கித் தரப்படும்’ என்கிறர் ஆந்திர முதல்வர்

ஐதராபாத், ஜூலை 19—

சில மாதங்களுக்குமுன், ஆந்திர கிராமமொன்றில் உயிருடன் எரிக்கப்பட்ட அரிசன சிறுவனின் குடும்பத்துக்குத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி, ரூ. 5,000 வழங்கியுள்ளதாக முதலமைச்சர் பிரம்மானந்தரெட்டி ஆந்திரச் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

இறந்துவிட்ட சிறுவனின் தாயாரின் விருப்பத்திற்கேற்ப, அத்தொகை பாங்கியில் போடப்பட்டிருப்பதாகவும், சொந்தமாகச் சிறிது நிலத்தை எப்பொழுது வாங்க அவர்கள் விரும்பினலும், அப்பொழுது அப்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

துவக்கக் கல்விக்கு ரூ. 6,53,100 உதவி

சென்னை மாநகராட்சிக்கு தமிழக அரசு அளிக்கிறது

சென்னை, ஜூலை 20—

துவக்கக் கல்விக்கெனத் தமிழக அரசு சென்னை மாநகராட்சிக்கு ரூ. 6,53 100 உதவித் தொகையாக அளித்திருக்கிறது.

1966—67-ம் ஆண்டு கல்வி வரியிலிருந்து கிடைத்த பணத்திலிருந்து இத்தொகையை அரசு அளித்திருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாட்டைச் சித்தரிக்கும் விளம்பரம்

இரயில் வண்டிகளிலும் இடம் பெறுகின்றன

புதுடில்லி, ஜூலை 20—

சிறிய மகிழ்ச்சிகரமான குடும்பத்தைச் சித்தரிக்கும் 1,000 விளம்பரப் பலகைகள், இரயில்வே பெட்டிகளில் பயணிகளின் பார்வைக்கு வைக்கப்படும்.

சிறு குடும்பத்தின் அவசியத்தைப் பயணிகள் உணரச் செய்வதே இதன் நோக்கம்.

நாளாவட்டத்தில் இத்தகைய விளம்பரப் பலகைகள், இரயில் பெட்டிகள் அனைத்திலும் இடம் பெறும்.

வெளி மாநிலங்கட்கு ஏற்றுமதியாகும் அரிசியின் அளவு

மறு பரிசீலனை செய்யுமாம் ஆந்திர அரசு

ஐதராபாத், ஜூலை 19—

“பருவ மழை தவறியதைக் கருத்தில் கொண்டு, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் அரிசியின் அளவு குறித்து, ஆந்திர அரசு மறுபரிசீலனை செய்யவேண்டியிருக்கும்”

என்று ஆந்திர சட்டமன்றத்தில், வழங்கு துறை அமைச்சர் வி. பி. இராசு கூறியிருக்கிறர்.

கடந்த நவம்பர் திங்களிலிருந்து இதுவரையில் 2.4 இலட்சம் டன் அரிசி ஏற்றுமதியாகியிருக்கிறது. இவ்வாண்டு அக்டோபர் திங்களுக்குள் 6-இலட்சம் டன் அரிசி ஏற்றுமதியாக வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருந்தது.

பயிர்களுக்குப் பாதுகாப்பு

வளர்ச்சிக்கு வழிகோல மாநாட்டில் ஆய்வு

பயிர்களில் பூச்சி வராமல் தடுப்பது எப்படி—நோயிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பது எப்படி—நோயே வராமல் தடுப்பதற்கு என்ன வழி—ஆகியவை குறித்து விவாதிக்கவும், விவரம் அறியவும் காமன்வெல்த் பயிர் பாதுகாப்பு மாநாடு ஒன்று இலண்டனில் நடைபெற்றது. இந்தியாவின் பிரதிநிதிகளாக இருவர் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் விவாதங்கள், பயிர்கள் வளர்ப்பில் கையாள வேண்டிய முறை பற்றியே அமைந்தன. இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் காமன்வெல்த் அரசாங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

காமன்வெல்த் நாடுகள் பெரும்பாலும் விவசாய நாடுகளாக இருப்பதுதான், அநேகமாக எல்லா காமன்வெல்த் நாடுகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டன.

வரி மூலம் டெல்லிக்கு வருமானம் அதிகரிப்பு

புதுடில்லி, ஜூலை 20—

மத்திய அரசால் வரி விதிக்கப்படும் இனங்கள் மூலம் 1968 ஏப்ரல் திங்களில் மொத்தம் ரூ. 155.44 கோடி வசூலாயிற்று.

1967 ஏப்ரலில் வசூலான மொத்தத் தொகை ரூ. 127.87 கோடியாக இருந்தது.

‘நம் நாடு’ வளர்ச்சிக்கு அன்பளிப்பு

காஞ்சீபுரம் திரு. எஸ். வி. துரைசாமி முதலியார் அவர்களின் மகன் திரு. டி. தட்சணமூர்த்தி பி.எஸ். சி.,-க்கும்–திருமதி. ஜெயலட்சுமிக்கும் 5—7—68-ல் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற திருமணத்தின்போது ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 51-ம்; தமிழக முதலமைச்சரின் தீ விபத்துத் துயர் துடைப்பு நிதிக்காக ரூ. 50-ம், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. அவர்களிடம் அளிக்கப்பட்டது.

நன்கொடை வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

தஞ்சை சேவியர் உடல்நிலை

“மாயூரம்-மணல்மேடு விவசாய மாநாட்டிற்குச் சென்று திரும்பி வருகையில் தஞ்சை திரு. சேவியர் அவர்களின் கார் ஒரு மரத்தில் மோதியதன் விளைவாக அவர் பலத்த காயமடைந்து தஞ்சை பெரிய மருத்துவமனையில் சிகிச்சை வருகிறர்” என்று திருமதி கிரேசி சேவியர் அறிவிக்கிறர்.

வெள்ள நிவாரண நிதி-- எம். ஜி. ஆர். உதவி

கேரள முதல்வருக்கு ரூ. 10,000 அனுப்பினர்

சென்னை, ஜூலை 20—

பெருமழை காரணமாகக் கேரளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினல் பாதிக்கபபட்ட மக்களுக்கு உதவியளிக்கும் வகையில், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம் எல்.ஏ. அவர்கள் அளித்துள்ளார். இதற்கான 'சேக்'கை அவர் கேரள முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்.

இந்திரா வருகிறர்

சேரளத்தில் வெள்ளத்திஞல் ஏற்பட்ட சேதத்தை நேரில் கண்டறிவதற்காகத் தலைமையமைச்சர் இந்திரா, இத்திங்கள் இறுதியில் கேரளத்திற்குச் செல்லக் கூடும்.

ரூ. 3.50 கோடி நட்டம்

மாநிலத்தில், வடக்கு—மத்தியப் பகுதிகளில் மட்டும் ரூ. 3 கோடி முதல் ரூ. 3.50 கோடி வரையில் நட்டம் ஏற்பட்டிருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கண்ணனூர், கோழிக்கோடு மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இரு மாவட்டங்களில் மட்டும் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூ. 1.50 கோடி இருக்கும்.

குட்டநாடு பகுதியில் 40,000 ஏக்கரில் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கோழிக்கோடு மாவட்டத்தில் வெள்ளத்திஞல் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து 60,000 பேர் கொண்ட 10,500 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

29,000 ஏக்கரில் நெற்பயிர்கள், வெள்ளத்தில் மூழ்கியுள்ளன; இதஞல் ஏற்பட்ட நட்டம் ரூ. 20 இலட்சம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கண்ணனூர், கோழிக்கோடு மாவட்டங்களின் சாலைகளுக்கு மட்டும் ரூ. 30 இலட்சம் வரையில் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானுக்கு பெல்ஜியத்திலிருந்து ஆயுதங்கள்?

10-இலட்சம் டாலருக்குக் கடன் ஒப்பந்தம்

பிரசல்ஸ், ஜூலை 20—

பெல்ஜியம் அரசு பாகிஸ்தானுக்கு 10-இலட்சம் டாலர் கடனைக வழங்கும் வகையில் ஒப்பந்தம் ஒன்று இங்கு கையெழுத்தாகியிருககிறது.

இதை, பாகிஸ்தான், 'போர்த் தளவாடங்களை வாங்கப் பயன்படுத்தக்கூடுமோ' என்ற அச்சத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

பெல்ஜியம், அமெரிக்காவின் பழமையான பேட்டன் டாங்கிகளை விலக்கிவிட்டு, அதற்குப் பதிலாக நவீன ஜெர்மன் டாங்கிகளைத் தனது இராணுவத்தில் சேர்த்து வருவதாகவும், அப்படி பெல்ஜியத்தால் கழித்துக் கட்டப்படும் பேட்டன் டாங்கிகளைப் பாகிஸ்தான் கேட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

ஆனல், பெல்ஜியம் அரசு, இதில் எவ்வித உறுதிமொழியும் இன்னும் பாகிஸ்தானுக்குத் தரவில்லை என்று கூறப்படுகிறது.

பெல்ஜியம் பத்திரிகை ஒன்று, 'இக்கடன தொகையைப் பெல்ஜிய இராணுவத் தளவாடங்களை வாங்கப் பயன்படுத்தப்படமாட்டாது' என்று நமபுவதாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறது.

சிறந்த தமிழ்ப் படங்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நெடுஞ்செழியன், மாநகராட்சி உறுப்பினர் ஏ. ஏ. கபாலமூர்த்தி, காஞ்சி எஸ். பிரகாசம், எம். பி. அசன் ஆகியோர் உறுப்பினர்கள்.

இத்துடன், வருவாய்த் துறையில் திரைப் படச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் கவனிக்கும் உறுப்பினரும் இக்குழுவில் இடம் பெறுவார்.

தேர்வுக் குழுத் தலைவரும் உறுப்பினர்களும் கௌரவ உறுப்பினர்களாகப் பணியாற்றுவர்.

ரோஜா பாக்கு & புகையிலை

REGD. NO. 118331 ROJA

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

கலப்பு மணத் தங்கப் பதக்கம்

அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

திருச்சி, ஜூலை 20—

"கடந்த ஜூலைத் திங்களுக்குப் பிறகு, மாநிலத்தில் கலபபு மணம் செய்துகொண்டவர்களுக்கு, அக்டோபர் 2-ம் நாள் தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும்"

என்று அமைச்சர் சத்தியவாணி முத்து அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"கலப்பு மணம் செய்துகொண்டவர்களின் பட்டியலைத் தயாரித்து அனுப்புமாறு மாவட்ட நல அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்; அவர்கள் பரிசிலனை செய்து தேர்ந்தெடுத்து அனுப்பும் பட்டியலில் உள்ளவர்கட்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலட்சம் வாக்காளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கும் முறையில், இந்த வாக்காளருக்கு அஞ்சல் அட்டை மூலம் அவரவர் முகவரிக்கு முன்னறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அப்போதுதான் அந்தந்த முகவரியில் அவர்கள் இல்லை என்பது தெரியவந்திருக்கிறது.

இது குறித்த முறையீடுகளைத் தெரிவிக்கக் குறிப்பிட்டிருந்த தேதியில், இவர்களில் மூன்று சதவிகிதம் பேர்தான் தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்துள்ளனர்.

திருத்தணி

தி.மு.க. கிளைத் தேர்தல்

செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி தி. மு. க. கிளைத் தேர்தல் 25—7—68 அன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

ஜூலை, 22: இலுப்பக்கூரை; 23; பாபநாசம்; 24: பாபநாச வட்டம்: 25: கோவை; 26, 27: காரமடை வட்டம்; 28: காலை: குன்னூர்; மாலை: கோவை; 29: தர்மபுரி; 31: பெரிய கலையம்புத்தூர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

21--7--68

சென்னை 90-வது வட்டம்

புதுர் என். எஸ். கே. நினைவு மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு எம். ஜி. ஆர். நகரில்; தலைவர்: எஸ். ஏ. வரதன்; பேசுவோர்: ஏ. பி. சஞர்த்தனம் எம்.எல் சி., எம். குமார், ஏ.எஸ். இராமன் எம்.சி., சைதை சம்பந்தம் எம்.சி., கே. டி. என். வளர்மதி, டி. ஆர். செயராமன், பி. ஞானப்பிரகாசம், ஆர். பி. வீரப்பன், ஜி. ஆர். கிருட்டினன், எம். ஜி. ரங்கன் எம்.சி., மா. நா. செயச்சந்திரன்.

நாகல்நகர்

28-வது வட்ட தி. மு. க. சார்பில் தென்காசித் தேர்தல் வெற்றி விழா; மாலை 7-மணிக்கு சந்தைச் சாலையில்; தலைவர்: டி.என்.ஆர். மூர்த்தி; பேசுவோர்: கேரள சுந்தரம், மு. காதர்சா பி.ஏ., கோபாலன்.

நாகை

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு தென்னிந்திய திருச்சபை உயர்நிலைப் பள்ளி எதிரில்; தலைவர்: செ. செகபர் அலி; பேசுவோர்: சு. நாவலர் நம்பி, மு. கோவிந்தராசன், த. தனராசன், கோ. கவியரசன், கோவி. இளம்பரதி, கருணு, மு. செல்வராசு, மற்றும் பலர்.

திருவாரூர்

விசயபுரம் தியாகி சின்னச்சாமி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு கீழ வீதியில்; தலைவர்: மு. ச. சமரசபாண்டியன்; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., அ. இராசமாணிக்கம், டாக்டர் விசயராகவன். (முருகுபாண்டியன் கலை நிகழ்ச்சி உண்டு).

மதுரை

மாவட்ட--நகர தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 7-மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: எஸ். முத்து எம்.எல்.சி.; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், எஸ் எஸ். தென்னரசு, மற்றும் கழகச் சட்டமன்ற--நாடாளுமன்ற உறுப்பினர்கள்; வெற்றி வீரர் கதிரவனும் கலந்துகொள்வார். (மாலை 4-மணிக்கு தெற்கு மாரட் வீதியிலிருந்து ஊர்வலம் புறப்படும்).

சித்தலிங்கமடம்

தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 6-மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: கோ. நரசிம்மன்; பேசுவோர்: அ. சே. குமாரசாமி, குலசேகரன், கை. சந்திரகாசன், இரங்கநாதன், கே. சானகிராமன், அ. சுப்பராயன். (மதுரை கண்ணம்மா--தங்கராசு கலை நிகழ்ச்சி நடைபெறும்).

குடந்தை

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு மடத்துத் தெருவில்; தலைவர்: வி. பக்கிரிசாமி; பேசுவோர்: டி.கே. சீனிவாசன், ம. கோ. மணி, எஸ். ஆர். இராதா எம்.சி, பி. வி. செயராமன் எம்.சி., அப்பாய் சந்திரசேகரன், சை. சர்புதீன், ஆர். சின்னசாமி, வெங்கடேசன், ஆ. அமிர்தலிங்கம்.

22--7--68

மதுரை

முதல் வடட தி. மு. க. திறப்பு விழா; மாலை 7-மணிக்கு தத்தனேரி அண்ணு திடலில்; தலைவர்: அ. கு. மதிவாணன்; திறப்பாளர்: கு. திருப்பதி; பேசுவோர்: சி. தமிழரசி, எஸ். முத்து எம்.எல்.சி., பி. எஸ். மணியம், சொ. காவேரிமணியம், இரா. வீராசாமி, பெ. பெரியசாமி, க. அலாவுதீன், எஸ். ஆர். பெரியசாமி, மற்றும் பலர்.

சிட்லபாக்கம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தென்காசி சதிரவனுககுப் பாராட்டு; தலைவர்: இரா. சீதாபதி; பேசுவோர்: ந. வீராசாமி எம்.எல்.ஏ அரங்கநாதன் எம்.எல்.ஏ. முனு. ஆதி எம்.எல்.ஏ., பவளவண்ணன் (துணை மேயர்), சி. இராமலிங்கம், வி. பி. அகிலன், நல்லதம்பி, த. தக்கரபாணி, மௌலாணு; நன்றியுரை: கா. மு. கதிரவன்

கணபதிசெட்டிகுளம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: த. கண்ணன்; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், எம். ஏ. சண்முகம், ஏ. ஜி. பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ., சி. பி. திருநாவுக்கரசு, செ. சிங்கு.

23--7--68

சென்னை 26-வது வட்டம்

தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 7-மணிக்கு பெத்துநாயக்கன்பேட்டை சுந்தர முதலி தெருவில்; தலைவர்: மு. நடராசன்; பேசுவோர்: ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., எம்.ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., இளம்பரிதி, இரா. சஞர்த்தனம், ம. வ. சிவபூடணம், என.வி.என். செல்வம்.

வெங்கமேடு

எம். ஜி. ஆர். மன்றத் துவக்க விழா; மாலை 7-மணிக்கு வாஞெலித் திடலில்; தலைவர்: ஏ. சாமியப்பன்; பேசுவோர்: கேரள சுந்தரம், ஆர். என். இராமசாமி, என். ஆர். இராமசாமி, டி. கே. சின்னதம்பி, பரமத்தி சண்முகம், கே, கனகராஜ். கே. ஜி. உமாகாந்தன், காளியப்பன், கே. எஸ். பழனியப்பன், ப. கிருட்டினன்.

விழுப்புரம்

பொதுப்பணி மன்றச் சார்பில் பாராட்டுவிழா; மாலை 6 மணிக்கு கிருபாம்பிகை கலை அரங்கில்; தலைவர்: எம். சண்முகம் எம். எல்.ஏ., பாராட்டுப் பெறுவோர்: ப. உ. சண்முகம் எம்.எல்.சி., கா. மு. கதிரவன் எம்.எல்.ஏ., பேசுவோர்: எம். இராமன் எம். எல்.ஏ., மேகநாதன், கே. வி. இராமகிருட்டினன், ச. பக்தவத்சலம், வேங்கைமார்பன், மற்றும் பலர்.

நெல்லை மாவட்ட வட்டக் கழகத் தேர்தல்

"வரும் ஆகஸ்டுத் திங்கள் 3, 4-ம் நாட்களில் நடைபெறும் வட்டக் கழகத் தேர்தலில் எந்த ஒரு பொறுப்புக்கும் போட்டியிட விரும்பும் தோழர்கள், என்னிடம் தலைமைக் கழக வேட்பாளர் பாரம் வாங்கி நிறைவு செய்து, 24-7-68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்"

என்று நெல்லை மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். எஸ். சிவசாமி அறிவிக்கிறர்.

குமரி மாவட்ட தி.மு.க. கிளைகளில் மறுதேர்தல்

குமரி மாவட்டத்தின் கீழ்க் காணும் கிளைகளில் கீழ்க் காணும் நாட்களில் குறிப்பிட்ட ஆணையாளர்களின் தலைமையில் 28—7—68 காலை 10 மணிக்கு மறுதேர்தல் நடைபெறும்.

1. குளச்சல் நகரக் கிளை— ஆணையாளர்: ஏ. செல்லப்பா.
2. குழித்துறை நகரக் கிளை— ஆணையாளர்: சி. கிருஷ்ணன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

பரிசுக் குலுக்கலில்........

ரூ. 2 கட்டியவருக்கு ரூ. 2 இலட்சம் பரிசு

இலங்கைத் தோட்டத் தொழிலாளிக்குக் கிடைத்தது

கொழும்பு, ஜூலை 19—

இலங்கை அரசால் வாராவாரம் நடத்தப்படும் பரிசுச் சீட்டுக் குலுக்கலில், ரூ. 2 செலுத்தி டிக்கெட் வாங்கிய தோட்டக் கங்காணி ஒருவருக்கு முதல் பரிசான ரூ. 2 02,250 கிடைத்திருக்கிறது. இதுவரையில் இவ்வளவு பெரிய தொகை யாருக்கும் பரிசாகக் கிடைத்ததில்லை.

ஓர் இலடசம் ரூபாய் முதல் பரிசாகக்கொண்ட அதிருஷ்டப் பரிசுப் போட்டி ஒவ்வொரு வாரமும் இலங்கையில் நடத்தப்படுகிறது. டிக்கெட்டின் விலை 50 சதம் ஆகும்.

சிறப்புப் பரிசான ரூ. 2 இலட்சத்தைப் பெற்ற இந்த டிக்கெட்டின் விலை ரூ. 2 ஆகும்.

நான்கு குழந்தைகட்குத் தந்தையான அவருக்கு வயது 40; மனைவியுடனும், ஒரு மகனுடனும், போலீசுப் பாதுகாப்புடன் வந்து அவர் பரிசைப் பெற்றுச் சென்றர்.

இரண்டாவது பரிசான ரூ. 1 21,350 குமாரி ஞானசீல விஜயசிங்கே எனும் பட்டதாரிப் பெண்மணி ஒருவருக்குக் கிடைத்தது; அவர் வேலை ஏதும் இல்லாமலிருக்கிறர்.

மூன்றாவது பரிசின் மதிப்பு ரூ. 80,900 ஆகும்.

அரியாஞ அரசு லாட்டரிச் சீட்டு நடத்தும்

சண்டிகார், ஜூலை 20—

"அரியாஞவில் லாட்டரிச் சீட்டு நடத்த அரசு எண்ணியிருக்கிறது" என்று அரியாஞ சட்டமன்றத்தில் நிதியமைச்சர் அறிவித்தார்.

இதன்மூலம் நடப்பு ஆண்டில் பாககியுள்ள மாதங்களில் ரூ. 25 இலட்சம் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாப் அரசு லாட்டரிச் சீட்டு ஆரம்பம்

பஞ்சாப் அரசின் லாட்டரிச் சீட்டுத் திட்டம் இன்று துவக்கி வைக்கப்பட்டது; மாநில ஆளுநர் நிதியமைச்சரிடமிருந்து லாட்டரிச் சீட்டு ஒன்றை வாங்கினர்.

சட்டமன்றக் காங்கிரசுக் கட்சித் தலைவருக்கும் டிக்கெட் ஒன்றை, நிதியமைச்சர் விற்றர்.

பட்டுக்கோட்டை நகர தி. மு. க. தேர்தல்

"ஏற்கனவே அறிவித்ததற்கேற்ப, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை நகர தி.மு.க. கிளைத் தேர்தல் 28-7-68 ஞாயிறு காலை 10-மணிக்கு தலைமைக் கழக ஆணையாளரின் தலைமையில் நடைபெறும்"

என்று தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. ப. நாராயணசாமி அவர்கள் அறிவிக்கிறர்.

காரைக்குடி நகர் தி. மு. க. தேர்தல்

"26—7—68 இரவு 8 மணியளவில் காரைக்குடி நகர் தி.மு.க. தேர்தல் நடைபெறும். பொதுக் குழு உறுப்பினர் கா. காத்த முத்து அவர்கள் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்துவார்"

என மாவட்ட தி. மு. க. செயலாளர் அறிவிக்கிறர்.